# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம், பங்குனி 02-ஆம் நாள்,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ஆம் நாள்,திங்கள்கிழமை

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1035/2025

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-008253-2025 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரி பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர்நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண். 779/2025<br><br>எதிரியின் மீது 303(2) BNS-ன் கீழ்.<br><br>// எதிரி //<br><br>காளிதாஸ்(எ)விஜய்,<br>த/பெ. ரெங்கநாதன்,<br>ரெங்கநாயகிபுரம்,<br>செங்கமங்கலம்,<br>பேராவூரணி(தாலுகா),<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 11.09.2025 |
| 4) | முறையிட்ட நாள் | | 12.09.2025 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 12.09.2025 |
| 6) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 12.09.2025 |
| 7) | எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 12.09.2025 |
| 8) | எதிரி பிணையில் விடப்பட்ட நாள் | | Till date Judicial Custody |
| 9) | எதிரி காவலில் இருந்த நாட்கள் | | 12.09.2025 – Till date Judicial Custody |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட | | 27.11.2025 |

<table>
<tr><td></td><td>நாள்</td><td></td><td></td></tr>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திருமதி. V.M. ரம்யா ஸ்ரீ,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரியிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>08.12.2025</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரியின் மீது 303(2) BNS-ன் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரியின் பதில்</td><td></td><td>எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>07.02.2026</td><td>07.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>07.02.2026</td><td>07.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.02.2026</td><td>07.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>07.02.2026</td><td>07.02.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>20.02.2026</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரி யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர்</td><td></td><td>ஒருவருமில்லை.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள் | | |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 06.12.2025 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 12.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. |
| 24) | முடிவு | | எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிகளுக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | 16.03.2026 |
| 26) | தீர்ப்பு நாள் | | 16.03.2026 |

## தீர்ப்புரை

1) இவ்வழக்கின் சாட்சி 1 நடராஜ் என்பவர் கரூர், அரசுகாலனி, காந்திநகர் 4 வது தெருவில் அவரது குடும்பத்துடன் வசித்துக்கொண்டு மருந்து விற்பனையாளராக வேலை செய்து வருகிறார். இவர் தனது விற்பனையாளர் பணிக்காக TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி வந்துள்ளார். இவ்வழக்கின் எதிரி காளிதாஸ்(எ)விஜய் என்பவர் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி(தாலுகா), செங்கமங்கலம், ரெங்கநாயகிபுரத்தில் வசித்து வருகிறார். இவ்வழக்கின் சாட்சி 1 இவ்வழக்கின் சம்பவ நாளான 11.09.2025 ம் தேதி 17.45 மணியளவில் கரூர் செங்குந்தபுரம் ரோட்டில் ராயல் ஆப்டிக்கல்ஸ் கடை அருகே தனக்கு சொந்தமான ரூ.75,000/- மதிப்புள்ள TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர

வாகனத்தை வைத்து சென்றிருந்த சமயத்தில் இவ்வழக்கின் எதிரி காளிதாஸ்(எ) விஜய் மேற்படி வாகனத்தை தான் ஆதாயம் அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் திருடி சென்றுள்ளார். எனவே எதிரியின் செய்கையானது ச/பி 303(2) **BNS** ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 779/2025 ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண். 1035/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், **BNSS** 230-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது **BNSS** 230-ஆவது பிரிவின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-**</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1** தன் சாட்சியத்தில், “நான் அரசு காலனியில் குடியிருந்து மருந்து விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2025 ம் தேதி மாலை 05.45 மணியளவில் கரூர், செங்குந்தபுரத்திலுள்ள

ராயல் ஆப்டிக்கல்ஸ் உள்ள சந்தில் எனக்கு சொந்தமான TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நானும், எனது நண்பரும் அரவக்குறிச்சி சென்றுவிட்டு மீண்டும் 08.30-08.45 மணியளவில் திரும்பி வந்து பார்த்தபோது வண்டியை காணவில்லை. பின்னர் நானும் எனது நண்பரும் அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. இரவு நேரம் ஆகிவிட்டதால் அடுத்த நாள் காலை 06.00 மணியளவில் கரூர்நகர காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1.** அன்றையதினம் 11.30 மணியளவில் போலிசார் எனது இருசக்கர வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக வரச் சொன்னதன்பேரில் காவல்நிலையம் சென்றேன். அங்கு என்னுடைய வண்டியை அடையாளம் காட்டச் சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள வாகனம் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2**. எனது இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். எனது இருசக்கர வாகனத்தை திருடியநபர் என்று காவல்நிலையத்திலிருந்த நபரைக் காட்டி போலிசார் சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2** தனது சாட்சியத்தில், “நான் வெண்ணமலையில் குடியிருந்து கொண்டு டெக்கில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். கடந்த 11.09.2025ம் தேதி இரவு 08.30-08.45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்றும் உடனடியாக எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தேடுவதற்காக வருமாறும் அழைத்தார். நான் சென்று அ.சா.1 உடன் சேர்ந்து அவரது இருசக்கர வாகனத்தை தேடிப்பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. அதனால் நான் திரும்ப சென்றுவிட்டேன். மறுநாள் காலை அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3** தனது சாட்சியத்தில், “நான் வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்துகொண்டு கெமிக்கல் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். கடந்த 11.09.2025 ம் தேதி இரவு 08.30-08.45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து செங்குந்தபுரம், ராயல் ஆப்டிக்கல்ஸ் அருகில் நிறுத்தியிருந்த தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று சொல்லி அழுதார். நான் அவருக்கு ஆறுதல் சொன்னேன். மறுநாள் காலை அ.சா.1 ம் நானும் கரூர் நகர காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றோம். பிறகு அன்றையதினம் இரவு இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக போலிசார் அழைத்ததன்பேரில் காவல்நிலையம் சென்று தனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர் " என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4** தனது சாட்சியத்தில், “நான் கரூர் ஆண்டாங்கோவிலில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 12.09.2025 ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் கரூர், ராயல் ஆப்டிக்கல்ஸ் அருகிலுள்ள டீக்கடையில் நானும், வையாபுரி என்பவரும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது கரூர்நகர போலிசார் அங்கு வந்து இருசக்கர வாகனம் திருடுபோனது சம்பந்தமாக விசாரித்து மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகசர் தயார் செய்தார்கள். என்னையும், வையாபுரியையும் பார்வைமகசரில் சாட்சிகளாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டோம். எங்கள் முன்னிலையில் பார்வைமகசர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வைமகசர் அ.சா.ஆ.3.** போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.

v) இவ்வழக்கில் **அ.சா.5** தனது சாட்சியத்தில், “நான் ரெங்கநாதம்பேட்டையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார்.

என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அதிலும் என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12.09.2025ம் தேதி நானும், எனது நண்பர் பொன்னுராசும் இருசக்கர வாகனத்தில் கரூர்டவுண் சென்று கொண்டிருந்தோம். சர்ச்கார்னர் முன்பு போலிசார் வாகனத் தணிக்கையில் இருந்தனர். எங்களை விசாரித்துக் கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்தவர் போலிசாரை கண்ட உடன் திரும்பி சென்றவரை போலிசார் பிடித்து விசாரித்தனர். ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை திருடி வந்ததாக கூறினார். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் ஞாபகமில்லை. அது ஸ்பிளண்டர் வகையை சேர்ந்தது. மேலும், ஆம்னி காரை திருடியதாகவும், அதை மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு எங்களையும் ஆஜர் எதிரியையும் போலிசார் அழைத்து சென்றனர். இரயில்வே ஸ்டேஷன் அருகே மறைத்து வைத்திருந்த ஆம்னியை அடையாளம் காட்டினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்து சென்றால் மோட்டார் சைக்கிள் திருடிய இடத்தையும், ஆம்னி வேனை மறைத்து வைத்திருக்கும் இடத்தையும் அடையாளம் காட்டி ஆம்னியை எடுத்து ஆஜர் செய்வேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4.** எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினார்கள். **அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.5.** போலிசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள இருசக்கர வாகனத்தைத்தான் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய வாகனமாகும்" என சாட்சியமளித்துள்ளார்.

vi) இவ்வழக்கில் **அ.சா.6** தனது சாட்சியத்தில், “நான் தற்போது கரூர்நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2025 ஆம் தேதி காலை 06.30 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்த போது நடராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று காவல் நிலைய குற்ற எண்.779/2025, ச/பி.303(2) BNSன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.6**. பின்பு

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே 09.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனிச்சாமி, வையாபுரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.**7. பின்பு சாட்சிகள் ஜமுனா, கிருஷ்ணகாந்த், சிவக்குமார், நகுல்சாமி, ஜான்பீட்டர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததன்பேரில் எதிரியைத் தேடி வந்தநிலையில் அன்றையதினமே 11.30 மணியளவில் சர்ச் கார்னர் அருகே வாகனத் தணிக்கையில் இருந்தபோது, அவ்வழியே வந்த **TN** 47 **AQ** 4216 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எங்களை கண்டதும் திரும்ப செல்ல முற்பட்டவரைப் பிடித்து சாட்சிகள் மோகன்ராஜ், பொன்ராஜ் முன்னிலையில் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து எவ்வித ஆசை வார்த்தையோ அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த குற்ற எண் வழக்கில் **TN** 67 **P** 7506 என்ற எண்ணுள்ள ஆம்னி வாகனத்தை திருடி வந்ததாகவும் அதை மறைத்து வைத்திருப்பதாகவும் கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்தியதை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியும் பின்னர் எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று எதிரி மறைத்து வைத்திருந்த ஆம்னி காரை எடுத்து ஆஜர்படுத்தியதை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கின் சொத்தான இருசக்கர வாகனத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.**8. ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தனது புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரி மீது ச/பி. 303 (2) **BNS** ன் படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

6) அரசு தரப்பில், இவ்வழக்கின் சாட்சி 1 நடராஜ் என்பவர் கரூர், அரசுகாலனி, காந்திநகர் 4 வது தெருவில் அவரது குடும்பத்துடன் வசித்துக்கொண்டு மருந்து விற்பனையாளராக வேலை செய்து வருகிறார். இவர் தனது விற்பனையாளர் பணிக்காக TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர வாகனத்தை பயன்படுத்தி வந்துள்ளார். இவ்வழக்கின் எதிரி காளிதாஸ்(எ)விஜய் என்பவர் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி(தாலுகா), செங்கமங்கலம், ரெங்கநாயகிபுரத்தில் வசித்து வருகிறார். இவ்வழக்கின் சாட்சி 1 இவ்வழக்கின் சம்பவ நாளான 11.09.2025ம் தேதி 17.45 மணியளவில் கரூர் செங்குந்தபுரம் ரோட்டில் ராயல் ஆப்டிக்கல்ஸ் கடை அருகே தனக்கு சொந்தமான ரூ.75,000/- மதிப்புள்ள TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர வாகனத்தை வைத்து சென்றிருந்த சமயத்தில் இவ்வழக்கின் எதிரி காளிதாஸ்(எ)விஜய் மேற்படி வாகனத்தை தான் ஆதாயம் அடையவேண்டும் என்ற நோக்கத்துடன் திருடி சென்றுள்ளார். எனவே எதிரியின் செய்கையானது ச/பி 303(2) BNSன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 779/2025 ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

7) இவ்வழக்கின் அ.சா.1 நடராஜ், நிகழ்வுநிலை புகார்தாரர் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் அரசு காலனியில் குடியிருந்து மருந்து விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2025ம் தேதி மாலை 05.45 மணியளவில் கரூர், செங்குந்தபுரத்திலுள்ள ராயல் ஆப்டிக்கல்ஸ் உள்ள சந்தில் எனக்கு சொந்தமான TN 47 Q 4216 என்று எண்ணுள்ள HERO SPLENDER இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நானும், எனது நண்பரும் அரவக்குறிச்சி சென்றுவிட்டு மீண்டும் 08.30-08.45 மணியளவில் திரும்பி வந்து பார்த்தபோது வண்டியை காணவில்லை. பின்னர் நானும் எனது நண்பரும் அக்கம்

பக்கத்தில் தேடிப் பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. இரவு நேரம் ஆகிவிட்டதால் அடுத்த நாள் காலை 06.00 மணியளவில் கரூர்நகர காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. அன்றையதினம் 11.30 மணியளவில் போலிசார் எனது இருசக்கர வாகனத்தை கண்டுபிடித்துவிட்டதாக வரச் சொன்னதன்பேரில் காவல்நிலையம் சென்றேன். அங்கு என்னுடைய வண்டியை அடையாளம் காட்டச் சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள வாகனம் என்னுடையது. எனது இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். எனது இருசக்கர வாகனத்தை திருடியநபர் என்று காவல்நிலையத்திலிருந்த நபரைக் காட்டி போலிசார் சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அந்த நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தனர்" என்று கூறியுள்ளார்.

8) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தினை ஆராய்கையில், "அ.சா.1 மருந்து விற்பனையாளராக இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. சம்பவ தினத்தின்போது அ.சா.1 தனது இருசக்கர வாகனத்தை கரூர் செங்குந்தபுரத்திலுள்ள ராயல் ஆப்டிக்கல்ஸ் உள்ள சந்தில் நிறுத்திவிட்டு அ.சா.1ம் அவரது நண்பரும் சேர்ந்து அரவக்குறிச்சி சென்றுவிட்டு மீண்டும் இரவு வந்து பார்த்தபோது அ.சா.1ன் இருசக்கர வாகனம் காணாமல் போயிருந்தது என்றும் இரவு முழுவதும் பல இடங்களில் தேடியும் வண்டி கிடைக்காததால் மறுநாள் காலை கரூர்நகர காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததும் தெரியவருகிறது. பின்னர் அன்றையதினம் காலை அ.சா.1ன் இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக கரூர்நகர போலிசார் சொன்னதன்பேரில் அ.சா.1 மேற்படி காவல்நிலையத்திற்கு சென்று அவரது வண்டியை அடையாளம் காட்டியுள்ளார் என்பதும் மேலும் அ.சா.1 தனது இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து பெற்றுக்கொண்டதும் தெரியவருகிறது. அ.சா.1 காவல்நிலையம் சென்றபோது அவரது இருசக்கர வாகனத்தை திருடிய நபர் எதிரிதான் என்று போலிசார் அடையாளம் காட்டியுள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

9) அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட முருகேசன் என்பவர் அ.சா.1 நடராஜ் என்பவரின் நண்பர் ஆவார். அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "கடந்த 11.09.2025 ம் தேதி இரவு 08.30-08.45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்றும் உடனடியாக எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தேடுவதற்காக வருமாறும் அழைத்தார். நான் சென்று அ.சா.1 உடன் சேர்ந்து அவரது இருசக்கர வாகனத்தை தேடிப்பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. அதனால் நான் திரும்ப சென்றுவிட்டேன். மறுநாள் காலை அ.சா.1 காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்" என்று அ.சா.1 ன் சாட்சியத்தினை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

10) அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட ராஜ்குமார் என்பவர் அ.சா.1 நடராஜ் என்பவரின் மாமனார் ஆவார். அவர் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "கடந்த 11.09.2025 ம் தேதி இரவு 08.30-08.45 மணிக்கு அ.சா.1 எனக்கு போன் செய்து செங்குந்தபுரம், ராயல் ஆப்டிக்கல்ஸ் அருகில் நிறுத்தியிருந்த தனது இருசக்கர வாகனத்தை காணவில்லை என்று சொல்லி அழுதார். நான் அவருக்கு ஆறுதல் சொன்னேன். மறுநாள் காலை அ.சா.1 ம் நானும் கரூர் நகர காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றோம். பிறகு அன்றையதினம் இரவு இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக போலிசார் அழைத்ததன்பேரில் காவல்நிலையம் சென்று தனது இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர்" என்று அ.சா.1 ன் சாட்சியத்தினை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

11) மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரது சாட்சியங்களை ஒருசேர ஆராய்கையில், சம்பவ தினமான 11.09.2025 அன்று இரவு 08.30-08.45 மணிக்கு மணியளவில் அ.சா.1 ன் இருசக்கர வாகனம் காணாமல் போனதாக அ.சா.1 புகார் கொடுத்துள்ள நிலையில் மேற்படி வாகனம் காணாமல் போனவுடன் மேற்படி அ.சா.1 அது சம்பந்தமாக அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களுக்கு போன் செய்து சொன்னது தெரியவருகிறது. மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3

ஆகியோர்களும் மேற்படி வாகனம் திருடுபோனது சம்பந்தமாக தங்களிடம் கூறினார் என்று கூறியுள்ள சாட்சியத்திலிருந்து அ.சா.1 ன் இருசக்கர வாகனம் சம்பவ தினத்தன்று காணாமல் போனது உண்மை என்பது மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களது சாட்சியங்களின் மூலம் உறுதிபடுத்தப்படுகிறது.

12) மேலும் அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை எதிரிதான் திருடினார் என்று நேரடியாக பார்த்த சாட்சிகளோ சிசிடிவி பதிவு காட்சிகளோ இல்லை. இந்நிலையில், அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தை எதிரிதான் திருடிச் சென்றதாக அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எதிரிதான் மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றார் என்று நேரடி சாட்சிகள் இல்லாத சூழ்நிலையில் மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றதை எதிரி தாமாக முன்வந்து தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி களவு போன இருசக்கர வாகனத்தையும் மேலும் எதிரி திருடிய நான்கு சக்கர ஆம்னி வேனையும் தன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 மோகன்ராஜ் என்பவரது சாட்சியம் இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

13) மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 மோகன்ராஜ், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் ரெங்கநாதம்பேட்டையில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அதிலும் என்னுடன் பொன்னுராசு என்பவர் கையொப்பம் செய்தார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 12.09.2025 ம் தேதி நானும், எனது நண்பர் பொன்னுராசும் இருசக்கர வாகனத்தில் கரூர்டவுண் சென்று கொண்டிருந்தோம். சர்ச்கார்னர் முன்பு போலிசார் வாகனத் தணிக்கையில் இருந்தனர். எங்களை விசாரித்துக்

கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்தவர் போலிசாரை கண்ட உடன் திரும்பி சென்றவரை போலிசார் பிடித்து விசாரித்தனர். ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் விசாரித்தபோது அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை திருடி வந்ததாக கூறினார். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் ஞாபகமில்லை. அது ஸ்பிளண்டர் வகையை சேர்ந்தது. மேலும், ஆம்னி காரை திருடியதாகவும், அதை மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு எங்களையும் ஆஜர் எதிரியையும் போலிசார் அழைத்து சென்றனர். "**இரயில்வே ஸ்டேஷன் அருகே மறைத்து வைத்திருந்த ஆம்னியை அடையாளம் காட்டினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்து சென்றால் மோட்டார் சைக்கிள் திருடிய இடத்தையும், ஆம்னி வேனை மறைத்து வைத்திருக்கும் இடத்தையும் அடையாளம் காட்டி ஆம்னியை எடுத்து ஆஜர் செய்வேன். எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள இருசக்கர வாகனத்தைத்தான் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய வாகனமாகும்**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேற்படி அ.சா.5ன் சாட்சியத்தை ஆராய்கையில் இவ்வழக்கின் எதிரி கடந்த 12.09.2025ம் தேதி தன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதில் தானும், தன்னுடன் பொன்னுராசு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஓட்டி வந்த அ.சா.1ன் இருசக்கர வாகனத்தையும் இரயில்வே ஸ்டேஷன் அருகில் மறைத்து வைத்திருந்த ஆம்னி வாகனத்தினையும் தன் முன்னிலையில் போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும் அ.சா.5 தனது முதல் விசாரணையில் தெளிவாக கூறியுள்ளார்.

15) மேலும் அ.சா.5ன் குறுக்குவிசாரணையை ஆராய்கையில் தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியும் என்றும், மேற்படி எதிரி தன் முன்னிலையில் தான் ஓட்டி வந்த அ.சா.1ன் இருசக்கர வாகனத்தையும் இரயில்வே ஸ்டேஷன் அருகில் மறைத்து வைத்திருந்த

திருடப்பட்ட ஆம்னி வாகனத்தையும் அடையாளம் காட்டினார் என்றும் மேற்படி இருசக்கர வாகனத்தை தன் முன்னிலையில்தான் போலிசார் கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும் கூறி தனது முதல்விசாரணை சாட்சியத்திற்கு முரண்படாமல் அதனை உறுதியூட்டும் வகையில் சாட்சியமளித்துள்ளார். மேலும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றோ, தனது முன்னிலையில் எதிரியிடமிருந்து வழக்குச் சொத்தானது கைப்பற்றப்படவில்லை என்றோ, எதிரியைத் தனக்கு தெரியாது என்றோ தன் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றோ குறிப்பாக அ.சா.5 தனது சாட்சியத்தில் முரண்பட்டு கூறவில்லை.

16) இவ்வழக்கில் எதிரி தன் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக் கொண்டு அதன்படி எதிரியிடமிருந்து அ.சா.1ன் இருசக்கரவாகனமானது கைப்பற்றப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ள அ.சா.5ன் சாட்சியத்தை செல்லாது என்று புறம் தள்ளுவதற்கு எவ்வித நியாயமான காரணிகளும் இல்லை. எனவே மேற்படி அ.சா.5ன் சாட்சியத்தினை ஆராய்ந்ததன் அடிப்படையில் எதிரி தன்னிச்சையாக அ.சா.1ன் இருசக்கர வாகனத்தை திருடியதை ஒப்புக்கொண்டு அ.சா.5 முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளது தெரியவருகிறது. எனவே அ.சா.5ன் சாட்சியத்தின் அடிப்படையில் எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

17) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் அ.சா.6 திரு. நாகராஜன், இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில், திருடுபோன வாகனம் நிறுத்தப்பட்ட இடம் பொதுமக்கள் அதிக அளவில் உள்ள இடம் என்றால் சரிதான் எனவும் அங்கு வந்திருந்த தனிநபர் சாட்சி யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் அருகாமையில் குடியிருந்த சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் சம்பவயிடத்திலிருந்த சிசிடிவி காட்சிகள் எதையும் கைப்பற்றவில்லை எனவும்

கூறியுள்ளார். கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்யப்படவில்லை எனவும் மேலும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்போதும் கைப்பற்றுதல் மகசர் மூலம் திருடுபோன வாகனங்களை கைப்பற்றியபோதும் வீடியோ பதிவுகள் எதையும் செய்யவில்லை எனவும் மேற்படி இருசக்கர வாகனத்தை எதிரிதான் ஓட்டி கொண்டு வந்தார் என்பதை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை எனவும் எனவே எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் போலியாக தயார் செய்யப்பட்டு போலிசாரின் வழக்கமான சாட்சிகளால் கையொப்பம் பெறப்பட்டுள்ளது எனவும் வாதிட்டார்.

18) மேற்படி கூற்றினை ஆராய்கையில், இவ்வழக்கில் எதிரிதான் அ.சா.1ன் இருசக்கர வாகனத்தை திருடினார் என்பதனை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்பது சங்கதிகளின்படி சரியானதுதான். ஆனாலும் வாகனத்தணிக்கையின் போது இருசக்கர வாகனத்தில் வந்த எதிரியை மடக்கி விசாரித்தபோது அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் அ.சா.1ன் இருசக்கர வாகனம்தான் என்பது தெரியவந்த நிலையில் அவர் தாமாக முன்வந்து அ.சா.5ன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் அடிப்படையில் அவர் திருடி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், மேலும் அவர் திருடி மறைத்து வைத்திருந்த ஆம்னி வேனையும் இரயில்வே ஸ்டேஷன் அருகிலிருந்து கைப்பற்றியதாக அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் வழக்கிற்கு முன்னதாக அ.சா.1ஐ தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். மேற்படி கூற்றிலிருந்து அவர் ஆதாய சாட்சி இல்லை என்பதும் பொதுவான சாட்சி என்பதும் தெரியவருகிறது. மேலும் தான் கையொப்பம் செய்த தாள்களில் எழுதியிருந்த விவரம் தனக்கு தெரியும் எனவும் எதிரி வாகனத்தை தன் முன்னிலையில் ஓட்டி வந்ததை தான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல என்றும் கூறியுள்ளார். மேற்படி கூற்றுகளிலிருந்து அவர் எந்த இடத்திலும் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டோ அரசு தரப்பிற்கு எதிராகவோ சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெரியவருகிறது. பொதுவாக ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் எதிரியின் உடைமையிலிருந்து களவுப் பொருளை கைப்பற்றுவதைக் காட்டிலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து பெற்ற தகவலின் விளைவாக ஏதோ ஒரு இடத்தில் எதிரி மறைத்து வைத்திருந்த திருட்டுப் பொருளை அவர் அடையாளம் காட்ட அந்த இடத்திற்கு சென்று அப்பொருளைக் கண்டுபிடித்து கைப்பற்றுவது சட்டத்தின் பார்வையில் மதிப்பு அதிகம் ஆகும். இவ்வழக்கில் அ.சா.1ன் களவு போன இருசக்கர வாகனத்தை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இரயில்வே ஸ்டேஷன் அருகில் அவர் அடையாளம் காட்ட அங்கு நிறுத்தியிருந்த மேற்படி வாகனத்தை கண்டுபிடித்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளதும் தெரியவருகிறது. எனவே மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து அ.சா.1ன் இருசக்கர வாகனத்தினை தன் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார்கள் என்கிற அ.சா.5ன் சாட்சியமானது வலுவானதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் உள்ளது எனவும் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் எதிர்வாதம் அரசு தரப்பு வழக்கினை பாதிக்கவில்லை எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

19) எனவே மேற்கண்ட விவாதங்கள், சாட்சியங்கள், சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீதான 303(2) BNS-ன் படியான குற்றச்சாட்டானது அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

20) இவ்வழக்கில், எதிரிக்கு அளிக்கவிருக்கும் தண்டனை குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 271(2) ன் படி வினவியபோது பின்வருமாறு கூறினார்.

எனக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

21) முடிவாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில்

இருந்தும் எதிரியின் மீதான 303(2) BNS-ன் படியான குற்றச்சாட்டானது அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு கண்டு எதிரியைத் தண்டிக்கும் முகமாக எதிரிக்கு 303(2) BNS-ன் படி 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து BNSS பிரிவு 271(2)ன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலமான 12.09.2025 முதல் 16.03.2026 வரையிலான 186 நாட்களை தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள 468 BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி சிறையில் இருந்து வருவதால் அபராதம் விதிக்கப்படவில்லை.

22) எதிரியின் மீது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சிசி.1037/2025 என்ற வழக்கில் நாளது தேதியில் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டு அதன்படி 303(2) BNS-ன் படியான குற்றத்திற்கு 1 வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சிறைத்தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் மேற்படி சிறைத்தண்டனை காலத்திலிருந்து எதிரி ஏற்கனவே மேற்படி வழக்கில் சிறையில் இருந்துவரும் காலமாக 186 நாட்களை 468 BNSS ன் படி கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி சிசி 1037/2025 வழக்கில் வழங்கிய தண்டனை காலத்தையும் இவ்வழக்கில் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்துடன் ஏககாலத்தில் அனுபவிக்க 467 BNSS ன் படி உத்தரவிடப்படுகிறது.

23) மேலும் இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண் 696/2025** ல் அ.சா.ஆ.2 ல் கண்டுள்ள TN 47 AQ 4216 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை, அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும், மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

24) இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில்

தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 16.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.16 19:26:49 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1. | நடராஜ் |
| அ.சா.2 | முருகேசன் |
| அ.சா.3 | ராஜ்குமார் |
| அ.சா.4 | பழனிச்சாமி |
| அ.சா.5 | மோகன்ராஜ் |
| அ.சா.6 | திரு. நாகராஜன், காவல் உதவி ஆய்வாளர். |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | இருசக்கர வாகனத்தின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல்மகசர் |
| அ.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | படிவம் 91 |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :-</u>**

அ.சா.பொ- இல்லை.

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.16 19:27:02 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**கரூர்.**

16.03.2026
**சிசி.எண். 1035/2025**

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.

முடிவாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீதான 303(2) BNS-ன் படியான குற்றச்சாட்டானது அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு கண்டு எதிரியைத் தண்டிக்கும் முகமாக எதிரிக்கு 303(2) BNS-ன் படி 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து BNSS பிரிவு 271(2)ன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலமான 12.09.2025 முதல் 16.03.2026 வரையிலான 186 நாட்களை தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள 468 BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி சிறையில் இருந்து வருவதால் அபராதம் விதிக்கப்படவில்லை.

எதிரியின் மீது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சிசி.1037/2025 என்ற வழக்கில் நாளது தேதியில் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டு அதன்படி 303(2) BNS-ன் படியான குற்றத்திற்கு 1 வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சிறைத்தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் மேற்படி சிறைத்தண்டனை காலத்திலிருந்து எதிரி ஏற்கனவே மேற்படி வழக்கில் சிறையில் இருந்துவரும் காலமாக 186 நாட்களை 468 BNSS ன் படி கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி சிசி 1037/2025 வழக்கில் வழங்கிய தண்டனை காலத்தையும் இவ்வழக்கில் வழங்கப்பட்ட தண்டனைக் காலத்துடன் ஏககாலத்தில் அனுபவிக்க 467 BNSS ன் படி உத்தரவிடப்படுகிறது.

மேலும் இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண் 696/2025** ல் அ.சா.ஆ.2 ல் கண்டுள்ள TN 47 AQ 4216 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை, அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும், மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.16 19:27:15 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| | | |